

# பனிமயம்

அக்டோபர் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

தங்கத் தேர் 2023க்கான பணிகள் தொடங்கி விட்டன. இயேசுவின் இரண்டாம் வருகை குறித்துப் பேசிய பவுலடியார், “இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு **காத்திருக்கிறது**” (உரோ 8:19) என்கிறார். பனிமயத் தாயின் அன்புப் பிள்ளைகளான நாமோ, தங்கத் தேரில் நம் தங்கத் தாய் வீற்றிருந்து பவனி வரப்போவதைக் காண்பதற்காக பேராவலோடு காத்திருக்கிறோம்.

வெறுமனே காத்திருந்தால் போதுமா? “நாம் தூய ஆவியின் துணையால் நம்பிக்கையின் வழியாய் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவோம் என்னும் எதிர்நோக்கு நிறைவேறும் என ஆவலோடு **காத்திருக்கிறோம்**” (கலா 5:5) என்ற பவுலடியாரின் சொற்களுக்கிணங்க, இறைவேண்டலோடு காத்திருக்கிறோம். கடந்த 25.09.2022 ஞாயிறு அன்று பங்கின் அன்பியங்களில் **300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு** தொடங்கியுள்ளது.

தங்கத் தேரின் ஆசீர்வாதங்களுக்காக இம்மாதம் 08.10.2022 இரண்டாம் சனியன்று இரவு 10.00 மணி முதல் அதிகாலை 05.00 மணி வரை பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையின் முன்னெடுப்பில் **முழு இரவு தொடர் செபமாலை** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, ஒவ்வொரு மாதமும் தங்கத் தேர் 2023 சிறப்பு நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது. வாருங்கள், எல்லாரும் மன்றாடுவோம், தங்கத் தேரின் ஆசிகளைப் பெற்றுக்கொள்வோம்.

தங்கத் தேரில் வலம் வரவிருக்கும் நம் பனிமய அன்னை நமக்காகப் பரிந்து மன்றாடி, இன்னும் புதிய ஆசிகளை நமக்குப் பெற்றுத் தருவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 23 தாரகை 2

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### அனைவருக்கும் திறந்த ஒரு திருஅவையாக...

என்றும் பிரமாணிக்கத்துடனும் துணிவுடனும் நற்செய்தியை அறிவிக்கும் திருஅவை ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் வரவேற்பு நிறைந்த சமூகமாகத் திகழவும் எப்போதும் ஒன்றிப்புச் சூழலில் வாழவும் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. நாசரேத் நோக்கிய எதிர்நோக்கின் பயணம் ........................4
அருள் மரி வேந்தன்
2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்.........6
செல்வராஜ் மிராந்தா
3. மரியன்னைப் புனிதர்கள் :
புனித அத்தனாசியஸ்..............................................................8
அருள்பணி. குமார்ராஜா
4. வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள் :
ஆயர் மேதகு தாமஸ் பர்னாண்டோ ..................................10
கலாபன் வாஸ்
5. பனிமய அன்னை -
மதுரை மன்னர்கள் அளித்த மானியம் ............................12
தி. சொர்ணராஜன் விக்டோரியா
6. பனிமய சாட்சியம்.......................................................................13
7. விவிலியப் போட்டி ...................................................................14
8. தங்கத் தேர் ஆசிர்வாதங்களுக்காக
முழு இரவு தொடர் செபமாலை - 2022...............................17
9. பனிமயப் பகிர்வு.........................................................................18
10. மாதம் ஒரு மாதா படம் ........................................................23
11. தங்கத் தேர் ஆசிகளுக்காக
300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டுகள் ..................24



# நாசரேத் நோக்கிய எதிர்நோக்கின் பயணம்!

"என்னுடைய பயணங்களில் பலவற்றைக் கண்டிருக்கிறேன்; நான் எடுத்துரைப்பதைவிட மிகுதியாகப் புரிந்துகொண்டேன்" (சீஞா 34:11) என்கிறார் சீராக்கின் ஞானநூலின் ஆசிரியர். எல்லாருடைய வாழ்விலும் பயணங்கள் பல இருக்கின்றன. அவையெல்லாம் நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றன. நமது கண்கள்தாம் திறக்கப்பட வேண்டும். யார் திறந்த மனதோடு இந்த உலகில் பயணம் செய்கிறார்களோ, அவர்கள் வாழ்வின் பாடங்களைப் படித்துக் கொள்கிறார்கள் என்பது ஒரு வாழ்வியல் நியதி.

அன்னை மரியாவின் வாழ்விலும் பல பயணங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடத்தை அவருக்கு உணர்த்தின. மரியாவின் பயணங்கள் நமக்கும் வாழ்வியல் பாடமாய் அமைந்துவிடுகின்றன.

மரியாவின் அத்தகைய பயணங்களில் ஒன்றுதான் நாசரேத்தை நோக்கிய எதிர்நோக்கின் பயணம். வேற்று நாடாகிய எகிப்தில் அகதியாய், ஏதிலியாய் வாழ்ந்து வந்த திருக்குடும்பம், இறைவனின் வழிகாட்டுதலால் நாசரேத்துக்குத் திரும்பி வந்த நிகழ்வை மத்தேயு நற்செய்தி நூலில் வாசிக்கிறோம். "ஏரோது காலமானதும் ஆண்டவருடைய தூதர் எகிப்தில் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, "நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரயேல் நாட்டுக்குச் செல்லும். ஏனெனில், குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்து போனார்கள்" என்றார். எனவே, யோசேப்பு எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரயேல் நாட்டுக்கு வந்து சேர்ந்தார்" (மத் 2:19-21).

இஸ்ரயேலில் அவர் தேர்ந்தெடுத்த ஊர் நாசரேத். "அங்கு அவர் **நாசரேத்து** என்னும் ஊருக்குச் சென்று அங்குக் குடியிருந்தார்" (மத் 2:23). யோசேப்பு, குழந்தை இயேசுவோடு அன்னை மரியா மேற்கொண்ட இந்த நாசரேத் பயணம் ஓர் எதிர்நோக்கின் பயணம் என்று அழைக்கப்படுகிறது. காரணம், எகிப்து நாட்டின் பாதுகாப்பற்ற, ஆதரவற்ற நிலையிலிருந்து, சொந்த நாட்டின், சொந்த ஊரின் பாதுகாப்பு மற்றும் உறவினரின் ஆதரவை நோக்கிய ஓர் எதிர்நோக்கின் பயணமாகத்தான் அது அமைந்திருக்க வேண்டும்.

எதிர்நோக்கு என்றால் என்ன? கிறித்தவ அருள்வாழ்வின் மூன்று தூண்களில் ஒன்றுதான் எதிர்நோக்கு. பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் அன்பின் பெருமையைப் பறைசாற்றும்போது

இந்த மூன்று தூண்களையும் முன் வைக்கிறார். "நம்பிக்கை, **எதிர்நோக்கு**, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது" (1 கொரி 13:13).

எதிர்நோக்கு என்பது இறைநம்பிக்கையிலிருந்து தோன்றும் ஒரு நேர்மறைப் பண்பு. உரோமையருக்கு எழுதிய திருமடலில் எதிர்நோக்கு பற்றி விளக்கமாக எழுதுகிறார் பவுலடியார். (எனவே, உரோமையர் திருமடலை "எதிர்நோக்கின் திருமடல்" என்றும் அழைக்கலாம்). எதிர்நோக்கை விளக்கும் பவுல் "நமக்கு மீட்புக் கிடைத்துவிட்டது. எனினும், எதிர்நோக்கும் அளவில்தான் அது கிடைத்துள்ளது. **கண்ணுக்குத் தெரிகிறதை நோக்குதல் எதிர்நோக்கு ஆகாது.** ஏற்கெனவே கண்ணால் காண்கிறதை எவராவது எதிர்நோக்குவாரா? நாமோ **காணாத ஒன்றை எதிர்நோக்கி இருக்கும்போது** அதற்காக தளரா மனத்தோடு காத்திருக்கிறோம்" (உரோ 8:24-25) என்கிறார்.

எனவே, எதிர்நோக்கு என்பது **எதிர்காலம்** சார்ந்தது. அது கண்ணுக்குத் தெரியாதது, இருப்பினும், நம்பிக்கையின் அடிப்படையில் தளரா மனத்தோடு காத்திருப்பதே எதிர்நோக்கு என்கிறார் பவுல். அன்னை மரியாவும் இந்த எதிர்நோக்கின் அடிப்படையில்தான் நாசரேத்தை நோக்கிப் பயணம் செய்தார். நாசரேத் அவரது சொந்த ஊர். எனவே, அங்கே கடவுள் தம் குடும்பத்தைப் பராமரிப்பார் என்று நம்பி இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

எதிர்நோக்கு தகைமை, மகிழ்ச்சி ஆகிய கொடைகளைத் தரும் என்கிறார் பவுல். "நாம் இப்போது அருள்நிலையைப் பெற்றிருக்கிறோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால்தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. கடவுளின் மாட்சியில் பங்குபெறுவோம் என்னும் **எதிர்நோக்கில்** நாம் பெருமகிழ்வும் கொள்ள முடிகிறது" (உரோ 5:2) என்கிறார் அவர். எனவே, நாசரேத் நோக்கிய பயணம் மரியாவுக்கு மகிழ்ச்சியின் பயணமாக அமைந்தது.

மேலும், "மன உறுதியால் தகைமையும், தகைமையால் **எதிர்நோக்கும்** விளையும் என அறிந்திருக்கிறோம். அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது; ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோ 5:4-5) என்கிறார் பவுல். எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது என்பது எத்துணை ஆறுதலான செய்தி. இறைவன்மீது கொண்ட நம்பிக்கையால்; ;அன்னை மரியா மன உறுதியும், தகைமையும், எதிர்நோக்கும் பெற்றுக்கொண்டார். இவை அனைத்தும் உள்ளத்தில் ஊற்றப்பட்ட இறையன்பின் கனிகளே என்பது பவுலின் நம்பிக்கை. தூய ஆவியால் நிரப்பப்பட்ட மரியா இத்தகைய பண்புகளைக் கொண்டிருந்ததில் வியப்பேதும் இல்லை.

"எதிர்நோக்கி இருப்பதில் **மகிழ்ச்சி** கொள்ளுங்கள்; துன்பத்தில் **தளரா மனத்துடன்** இருங்கள்; **இறைவேண்டலில்** நிலைத்திருங்கள்" (உரோ 12:12) என்னும் அறிவுரையில் மகிழ்ச்சி, தளரா மனம், இறைவேண்டல் என்னும் மூன்று மதிப்பீடுகளை முன் வைக்கிறார் பவுல். ஆம், நாசரேத் நோக்கிய எதிர்நோக்கின் பயணத்தில் மரியா மகிழ்ச்சியோடு, தளரா மனதோடு, இறைவனை வேண்டிக்கொண்டே பயணம் செய்தார் என்று நாம் துணிவுடன் நம்பலாம்.

உண்மையில் நாசரேத்தில் திருக் குடும்பத்தின் வாழ்க்கை அன்பு, அமைதி, மகிழ்ச்சி, பாதுகாப்பு நிறைந்த ஒன்றாக இருந்தது என்பதை நாம் அறிவோம்.

நம் வாழ்வின் பயணத்திலும் நாமும் எதிர்நோக்குடன் நடைபோடுவோமாக. நம்பிக்கை, தளரா மனம், மகிழ்ச்சி, தகைமை ஆகிய பண்புகள் நம் பயணத்தை எதிர்நேர்க்கின் பயணமாக மாற்றட்டும்.

**அருள் மரி வேந்தன்**

17

# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...



புதிய பங்குத் தந்தை வருகின்ற நேரத்தை அறிந்ததும், அவரை வரவேற்க ஆண்களும் பெண்களும் பீச் ரோட்டில் மாலையுடன் காத்திருந்தார்கள். அருள்தந்தை **ஹெர்மஸ் மொடுதகம்** கிரக்கோப் தெரு வழியே தோளில் ஒரு ஜோல்னா பையுடன் நடந்து சென்று பங்குத் தந்தையர் இல்லத்துக்குள் நுழைந்து விட்டார். இவ்வாறு ஆடம்பரங்களைத் தவிர்த்து 1987இல் தூய பனிமய மாதா பேராலய பங்குத் தந்தையாகவும் பசிலிக்கா ரெக்டராகவும் பொறுப்பேற்ற அருள்தந்தை ஹெர்மஸ் மொடுதகம் 1990வரை பணியாற்றினார்கள்.

இந்திய கத்தோலிக்க திருச்சபையின் முதல் சுதேச ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட தூத்துக்குடி மறைமாவட்டத்தின் முதல் ஆயரான பேரருட் பெருந்தகை கபிரியேல் பிரான்சிஸ் திபூர்சியுஸ் ரோச் ஆண்டகையின் மேல் அளவற்ற மதிப்பும் மரியாதையும் அன்பும் கொண்டிருந்த அருள்தந்தை ஹெர்மஸ் மொடுதகம் மேதகு ஆயரைப் போலவே புனித குழந்தை திரேஸ்மேல் அளவற்ற பக்தியில் அடிக்கடி மறையுரையாற்றும்போது "சின்னராணி சிறிய புஷ்பம்" என மேற்கோள் காட்டுவது வழக்கம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஏழாம் ஆண்டா எட்டாம் ஆண்டா என நினைவில்லை, பரிசுத்த பனிமய அன்னையின் திருவிழா அன்று கடைசி தேர்ஸ் நடக்கும்போது ஒரு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த இந்து தன் வாழ்வில் அன்னையின் அருளால் நடந்த ஒரு அற்புதத்தைப் பற்றி தனது உறவினர்களிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு நான் இரண்டு நாட்களுக்குப் பின் அருள்தந்தையிடம் அதுபற்றி சொன்னேன்.

"அதிர்ஷ்டம் கெட்டவன்" என்று உறவினர்களாலும் நண்பர்களாலும் ஒதுக்கி வைக்கப்பட்ட அந்த இந்து நபர், நன்கு படித்திருந்தும் முப்பது வயதைக் கடந்த பின்னும் ஒரு வேலையும் கிடைக்காமல் சுயதொழில் செய்யவும் முதலில்லாமல் நொந்துபோய் இருந்தாராம். அவர் சந்தித்த சோதிடர்கள் எல்லாம் "இந்த ஜென்மத்தில் உனக்கு தொழில் கிடையாது, காரணம் உன் ஜாதகத்தில் லக்னத்திற்கு பத்தாமிடத்திலோ, அல்லது சந்திரனுக்கு பத்தாமிடத்திலோ அல்லது சூரியனுக்கு பத்தாமிடத்திலே கிரகம் ஒன்றும் இல்லாதிருப்பதால் ஜன்மத்தில் வேலை கிடைக்காது. சுயசம்பாத்தியம் வராது" என்று தீர்ப்பு கூறிவிட்டார்களாம்.

இளம் வயதில் விதவையாகி தன் ஒரே மகனை வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கப் பாடுபட்டு பல சவால்களை எதிர்கொண்டு தனக்குத் தெரிந்த இட்லி கடை (காலையிலே இட்லி மாலையிலே வடை வகை, மீண்டும் இரவு இட்லி தோசையென) வீட்டிலேயே நடத்தி போராடிக் கொண்டிருந்த தாய் யாரோ



உறவினர் சொல்ல கேள்விப்பட்டு ஒரு சனிக்கிழமை பரிசுத்த பனிமய மாதா ஆலயத்தில் வந்து “அம்மா இது இனி உன் பிள்ளை, எம் பிள்ளை இல்ல - நீதான் ஒரு வழி செய்யனும்” என்று மடிப்பிச்சை கேட்டுச் சென்றாளாம். அதற்கு அடுத்த வாரமே நல்ல வேலை கிடைத்ததாம். ஒரு மாதம் சென்று முதல் சம்பளத்தை அப்படியே உண்டியலில் போட்டபின் கண்ணீர் மல்க, “அம்மா நீதான் இனி இவனுக்கு திருமணம் செய்து வைக்கனும். உங்கிட்டயே ஒப்படைச்சிட்டேன்” என்று சொல்லி ஆலயத்தை விட்டு வெளியே வரும்போது வேறொரு குடும்பம் ஆலயத்துக்குள் வருவதைப் பார்த்து சந்தித்துப் பேசி விட்டுச் சென்றார்களாம்.

சில நாட்கள் சென்றபின் யாரோ உறவினர் சொல்லி ஒரு வீட்டிற்குப் பெண் பார்க்கச் சென்றிருக்கிறார்கள். என்ன அற்புதம்! அன்று ஆலயத்தில் சந்தித்த அதே குடும்பம்! அன்று அங்கு பார்த்த அதே பெண். 27 வயது முதிர் கன்னி. வேறு பேச்சின்றி இரு வீட்டாரும் சம்மதித்து முதல் திருமண அழைப்பிதழை மாதா திருவிழா அன்று மாதா பாதத்தில் வைப்பதாக தீர்மானித்தார்களாம்.

அந்நிகழ்வைப் பற்றி அருட்தந்தையிடம் கூறியபோது ஏதோ சர்வசாதாரணமாக எடுத்துக் கொண்டதுபோல், “இதைத்தான் சொல்ல வந்தீர்களாக்கும்” என்று தன் டிராயரைத் திறந்து சில திருமண அழைப்பிதழ்களை எடுத்து மேஜைமேல் வைத்தார் - பத்துக்கும் மேற்பட்ட இதழ்கள். அதில் இரண்டு இஸ்லாமியர்களுடையது. மீதி பதினோரு இதழ்கள் இந்து சகோதரர்களுடையது. அப்போதுதான் அன்னையின் திருவிழா நாட்களில் கட்டுக்கடங்காத புறமத மக்கள் கூட்டம் வருவதன் உண்மைக் காரணத்தைப் புரிந்து கொண்டேன். மத வரம்புகளைக் கடந்து மக்களின் மாதாவாக அருள்பாலிக்கும் அன்னையின் புகழ்பாட புத்தகங்கள் போதாது.

தனக்கு முன்பு பங்குத் தந்தையர்களாக இருந்தவர்கள் பல திருப்பணிகளையும் கல்விப் பணிகளையும் செய்திருக்கும்போது தானும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் அருள்தந்தை ஹெர்மஸ் மொடுதகம் மனதைத் தூண்டியிருக்க வேண்டும். அதற்காக பலரிடம் ஆலோசனைகளைக் கேட்டதாக அறிகிறோம். இறுதியாக அவரே ஒரு முடிவுக்கு வந்து தனது எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கத் தொடங்கினார். அதைப் பற்றி அடுத்த இதழில் பார்க்கலாம்.

தொடரும்...

**செல்வராஜ் மிராந்தா**



# புனித அத்தனாசியஸ்

**(296 - 373)**

## மரியியலின் முன்னோடியான திருஅவைத் தந்தை!



புதிய ஏற்பாட்டில் இப்போது நாம் பயன்படுத்தும் 27 நூல்களையும் உறுதிப்படுத்தியவர் யார் தெரியுமா? கீழைத் திருஅவையில் "அலெக்சாந்திரியாவின் போப்" என்று அழைக்கப்பட்டவர் யார் தெரியுமா?

விடை தெரியாவிட்டால் தாழ்வில்லை. காரணம் பெரும்பாலானவர்களுக்கு இந்த விடை தெரியாதுதான். ஆனால், மேற்கண்ட இரண்டு சிறப்புகளுக்கும் சொந்தக்காரர் எகிப்து நாட்டின் அலெக்சாந்திரியா நகரத்துப் புனித அத்தனாசியஸ்.

தொடக்கத் திருஅவையின்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களைத் திருஅவைத் தந்தையர் என்று அழைக்கிறோம். இவர்களில் உரோமை நகர கிளமன்ட், அந்தியோக்கு நகர இஞ்ஞாசியார், ஸ்மிர்னா நகர போலிகார்ப், எராபோலிஸ் நகர பப்பையாஸ் ஆகியோர் திருத்தூதுவர் காலத்துத் திருஅவைத் தந்தையர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

லியோன் நகர ஐரனேயஸ், அலெக்சாந்திரியா நகர கிளமன்ட், அலெக்சாந்திரியா நகர ஆரிஜன், அலெக்சாந்திரியா நகர சிரில் ஆகியோரின் வரிசையில் வரும் கிரேக்க திருஅவைத் தந்தையருள் ஒருவர்தாம் அலெக்சாந்திரியா நகர அத்தனாசியுஸ்.

எகிப்து நாட்டின் அலெச்சாந்திரியா நகரில் கி.பி. 296ஆம் ஆண்டு பிறந்தவர் அத்தனாசியஸ். அவரது இளமைக்காலத்துச் செய்திகள் எதுவும் நம்மிடம் இல்லை. இருப்பினும், அவரது கல்வியறிவு, எழுத்தாற்றல் ஆகியவற்றைக் கொண்டு அவர் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை ஊகம் செய்யலாம்.

அலெக்சாந்திரியா நகரில் புகழ்பெற்ற மறைக்கல்விப் பள்ளி ஒன்று இருந்தது. அதில்தான் ஆரிஜன், புனித கிளமென்ட் இருவரும் மறைப்பணியாற்றியிருந்தனர். அங்கேதான் இளம் அத்தனாசியசும் மறைக்கல்வி பயின்றார். முதலில் அலெக்சாந்திரியா நகர ஆயர் அலெக்சாந்தருக்கு செயலராகப் பணியில் சேர்ந்தார். அவரது பணி நேர்த்தியைக் கண்ட ஆயர் அவரைத் திருத்தொண்டராக்கினார்.



325ஆம் ஆண்டு நைசியாவில் நடைபெற்ற திருச்சங்கத்தில் ஒரு திருத்தொண்டராக, தமது ஆயர் அலெக்சாண்டரின் செயலராகக் கலந்துகொண்டார் அத்தனாசியஸ். அப்போது அவருக்கு வயது 27. அங்கேதான் ஆர்யத் தப்பறைக்கு எதிராகத் தமது ஆயர் அலெக்சாந்தர் ஆற்றலோடு வாதாடுவதை நேரில் கண்டார். பின்னர், 328ஆம் ஆண்டு அலெக்சாந்திரியாவின் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னாளில் அதன் முதுபெருந்தந்தையாகவும் மாறினார்.

நைசியாவில் தீர்மானிக்கப்பட்ட கிறிஸ்து முழுமையான இறைவன் என்னும் நம்பிக்கை அறிக்கையைத் தீவிரமாகப் போதித்து, இயேசு தந்தைக்குச் சமமானவர் அல்லர் என்ற ஆர்யத் தப்பறையை எதிர்த்து வாதிட்டார். இதனால், ஐந்து முறை நாடு கடத்தப்பட்டார். இருப்பினும், மனம் தளராமல் தொடர்ந்து எழுதினார், போதித்தார். நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆயர் பணியாற்றிய அத்தனாசியஸ், இயேசுவின் மனிதாவதாரத்தைப் பற்றியும், புனித வனத்து அந்தோனியார் பற்றியும் எழுதிய ஏடுகள் இன்றளவும் புகழ் வாய்ந்தவை.

நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித அத்தனாசியுஸ்தான் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களையும் இறுதிப்படுத்தியவர். அவர் காலத்தில் திருஅவையின் பல இடங்களிலும் பல நூல்களையும் திருமறையாகப் பயன்படுத்தி வந்தனர். அத்தனாசியஸ்தான் இப்போது நாம் பயன்படுத்தும் 27 நூல்கள் மட்டுமே புதிய ஏற்பாடு என்று உறுதிப்படுத்தினார். கடிதமாக எழுதினார். அப்போதுமுதல் திருஅவை முழுவதும் இந்த 27 நூல்களை மட்டுமே புதிய ஏற்பாடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அன்னை மரியாவைப் பற்றி நேரடியாக அத்தனாசியஸ் பேசவில்லை, எழுதவில்லை. இயேசுவின் மனிதவதாரத்தைப் பற்றி எழுதும்போதே, அன்னை மரியாவும் அவரது எழுத்தில் இடம்பெற்றுவிட்டார். மனுவுரு எடுத்த இயேசு, ஆபிரகாமின் மகனானார். எனவே, எல்லா யூதர்களுக்கும் சகோதரர் ஆனார். மேலும், அவர் உடலெடுக்க அன்னை மரியா தேவைப்பட்டார் என்று எழுதினார்.

“ஓ மரியே, எங்கள்மீது இரங்குவது உமக்குத் தகுதியானதே. எல்லா அருளையும் உம்மீது பொழிந்தவரின் அருகில் நீர் நிற்கிறீர். நீரே கடவுளின் தாய், நீரே எம் அரசி. அரசரும், ஆண்டவரும், உம்மிடம் பிறந்தவருமான இயேசுவின் சார்பாக எங்களுக்கு உதவியருளும். இதனாலேயே, நீர் அருள் நிறைந்தவர் என அழைக்கப்படுகிறீர்” என்னும் மரியியல் மன்றாட்டு புனித அத்தனாசியஸ் இயற்றியது.

“மனிதன் இறைவனாக வேண்டும் என்பதற்காக, இறைவன் மனிதன் ஆனார்” என்பது புனித அத்தனாசியசின் புகழ்பெற்ற மேற்கோள்களுள் ஒன்று.

கி.பி. 373, மே 2ஆம் நாள் தமது 77ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் அலெக்சாந்திரியாவில் புதைக்கப்பட்டது, ஆனால் பின்னர் உரோமைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அண்மைக்காலத்தில் 1973ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் அவரது அருளிக்கங்களை மீண்டும் எகிப்துக்கு வழங்கினார். அங்கே அவை கெய்ரோவின் புனித மாற்கு பேராலயத்தில் வணங்கப்பட்டு வருகின்றன.



**அருள்பணி. குமார்ராஜா**

## வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள் - 4

# ஆயர் மேதகு தாமஸ் பர்னாண்டோ



மணப்பாடு, புனித வளனார் உயர்நிலைப் பள்ளியில் நான் பயின்று வந்தபோது, மணவை ஆலயப் பணியாளருக்கு, திருத்தந்தையின் **'பேனே மெரேந்தி'** விருதளிக்கும் நிகழ்ச்சியின் போது, புனித யாகப்பர் தேவாலய முற்றத்தில் தான், 1949இல் முதன் முறையாக சுவாமி தாமஸ் பர்னாந்துவை, துடிப்பான இளங்குருவாகப் பார்த்தேன்.

அவர்கள் ஆயராகப் பொறுப்பேற்ற பின், பலமுறை அவர்களுடன் உரையாடும் பேறு பெற்றேன். அவர்கள், தூத்துக்குடி ஆயராகப் பணியாற்றிய காலத்தில், நானும் பணி நிமித்தம் வடபுலத்திலேயே வாழ்ந்துவிட்டதால், நெருங்கிப் பழகும் வாய்ப்பில்லாது போயிற்று.

திருச்சி ஆயராக அவர்கள் பணிபுரிந்த போது, பல்வேறு நிகழ்ச்சிகளில், சூழ்நிலைகளில் அருகிருந்து பேசும் நல் வாய்ப்புக் கிடைத்தது.

மாமேதை - பேரறிஞர் - வித்தகர் என்ற நிலையிலிருந்து, ஒரு நண்பரைப் போல அன்னியோன்னியமாகக் கலந்துரையாடுவார்கள். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் - எளிமையானவர்.

1962-65 காலகட்டத்தில், இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்றபோது, ஞானதூதன் இதழில் பல முக்கியமான தகவல்களைப் பதிவு செய்தார். அதன் தொடர்ச்சியாகப் பல்வேறு கருத்தரங்கங்களும் ஆய்வுகளும் நடத்தி, பணிக்குழுக்களை தூத்துக்குடி மறைமாவட்டத்தில் உருவாக்கிய பெருமைக்கும் புகழுக்கும் உரியவர்.

**'தமிழ் இலக்கியக் கழகம்'** - என்ற அமைப்பை தூத்துக்குடியில் நிறுவியவர்.

**'அமெரிக்கன் ஆஸ்பத்திரி'** என்று பொது மக்களால் அழைக்கப்படும் திருஇருதய மருத்துவமனையை நிறுவியவர்.

இஞ்ஞாசியார் புரத்தில் சிறுமலர் குருமடத்தில், இளங்குரு மாணவர்களுடன் தங்கி, அவர்களைப் பணிக்குருத்துவத்திற்கு தயாரித்தவர்.

திருச்சியில் ஆயராகப் பணியாற்றியபோது, தமிழ் இலக்கியக் கழகத்தைத் திருச்சிக்குக் கொண்டு சென்று, சிறப்புடன் செயல்பட வழி வகுத்தார். பல்சமய உரையாடல் மன்றத்தை நிறுவினார்.

'தமிழ்க் கத்தோலிக்க எழுத்தாளர் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கி, எழுத்தாளர்களைப் பாராட்டியதோடு, அதன் புரவலராகவும் இருந்தார்.

1986இல் திருச்சியில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் அவர்களுடன் கலந்துரையாடியபோது, "பல நூற்களிலும் **ஓபீர்** எனக் குறிப்பிடப்படுவது **உவரி**தானே?" என்று அவர்களிடம் நான் கேட்டபோது, "இது தவறான தகவல்.... உவரி, ஓபீர் அல்ல" என்பதை ஆதாரப்பூர்வமாக எடுத்துரைத்தார்கள்.

திருச்சி ஆயர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற போதும், ஒதுங்கிவிடாமல் மக்களுடன் நெருங்கிப் பழகினார்கள்.

தவறு - குற்றம் காணும்போது, முகத் தாட்சணியமின்றி, கடிந்துரைப்பார். கனிவும் இரக்கமும் உள்ளவர். ஏழை எளிய மக்களை மிகவும் நேசித்தவர்.

உடல்நிலை நலிவுற்ற நிலையில், ஏறக்குறைய ஆறு ஆண்டுகள், தூத்துக்குடி இஞ்ஞாசியார்புரம் 'லொயோலா இல்லத்தில்' அவர்கள் வாழ்ந்து வந்தபோதும், எவ்விதக் கெடுபிடியுமின்றி, எத்தனையோ தனியார் நிகழ்ச்சிகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் மகிழ்ச்சியுடன் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

அவர்களின் சிம்மக்குரல், மணியோசை போன்று ஒலிக்கும். செந்தமிழ் வித்தகரின் தமிழ் மறையுரை கேட்க இனிமையாயிருக்கும்.

காலஞ்சென்ற சீனிவாச சாஸ்திரியாரை, 'SILVER TONGUED ORATOR' - என்று புகழ்வார்கள். நமது ஆயர் பெருமகனார் சொல்லேருழவராகவும், செந்நாப் போதகராகவும் – 'இவருக்கு நிகர் எவருமில்லை' – என்று பரிமளித்தவர்கள். இவரின் உரையைக் கேட்டுத் தமிழ் மாந்தும் மாந்தர் எண்ணிலர். குரலில் ஏற்ற இறக்கம் கொடுத்துக் கேட்போரைக் கவர்ந்துவிடும் சைவ சித்தாந்தச் செம்மல்!

புனித தோமையாரின் விழாக் கொண்டாடிய மறுநாளில், இறைவனிடம் தம் ஆவியை அர்ப்பணித்தார்கள் – நிறைவாழ்வு வாழ்ந்த வள்ளல் பெருமான்.

ஆயரவர்களின் உயிர் பிரிந்தபின் அவர்களின் சடலத்தைப் பார்த்தவர்கள், நிம்மதிப் பேரழகுடன் துயில் கொள்வதாக வாயாரப் புகழ்ந்தனர்.

இறுதி மரியாதையின்போது, இரங்கற் செய்தி வழங்கிய **கோட்டாறு ஆயர் லியோன் தர்மராஜ்** அவர்கள் பகிர்ந்து கொண்ட தகவல், தாமஸ் ஆண்டகையின் எளிமைக்கு உன்னதமான எடுத்துக்காட்டாகும்.

கோட்டாறு மறைமாவட்டத்தின் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டிருந்தார் சங்கைக்குரிய லியோன் தர்மராஜ் சுவாமிகள். இவருடைய தாய்மாமா (காலஞ்சென்ற) **சங்கைக்குரிய வெனான்சியுஸ்** சுவாமிகள், தூத்துக்குடி மறைமாவட்டத்தில் குருத்துவப் பணியாற்றிக் கொண்டிருந்தார் (எனது ஞானகுரு).

தனது மருமகன் புதிய குருவானவரை அழைத்துக்கொண்டு, தூத்துக்குடி ஆயர் தாமஸ் ஆண்டகையின் அறைக்குள் அழைத்துச் சென்று, சுவாமி வெனான்சியுஸ் அறிமுகப்படுத்தி ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஆயரவர்கள் தமது இருக்கையிலிருந்து எழுந்து, புதிய குருவின் முன் முழந்தாளிட்டு, "சுவாமி! நான் நல்ல ஆயனாகப் பணியாற்ற என்னை ஆசீர்வதியுங்கள்" – என்றாராம். இதைக் கேட்டபோது உடல் சிலிர்த்தது.... எத்தகைய எளிமை – பணிவு – புதுக் குருத்துவத்துக்குத் தரும் மதிப்பும் மரியாதையும்!

**கர்மவீரர் காமராசர்** இறந்தபோது, அவரிடம் மூன்று நான்கு வேட்டிகளும் சட்டைகளுமே இருந்ததாகச் சொல்வார்கள்.

பேராளர் தாமஸ் ஆண்டகையும் ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்தவர் – பெரும்பாலும் துவராடையே அணிவார். எளிய துறவியாகவும் உத்தமமான ஆயராகவும் திகழ்ந்ததினால்தான் மங்காப் புகழ் சுமந்து நிற்கிறார்.

ஆசிய நாடுகளிலேயே நீண்டகாலம் ஆயராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் இந்த எளிய ஆயர் பெருந்தகை.

இயேசுவின் சீடரான புனித தோமையாரின் வழிவந்த தாமஸ் ஆயரவர்கள் ஊன்றிய வித்தின் வீரியமாக இடிந்தகரையிலிருந்து ஏராளமான அருட்பணியாளர்களும், துறவியரும் உருவாகிக் கொண்டிருக்கின்றனர்... இதுதான் மிகச் சிறந்த விருது.

ஆயர் பெருந்தகை வாழ்ந்த காலத்தில் வாழும் பேறு – அவர்களுடன் பலமுறை நட்புடன் கலந்துரையாடிய வாய்ப்பு – அவர்களின் இறுதிப் பயணத்தில் பங்கேற்ற பல்லாயிரக்கணக்கான இறைமக்களுடன் ஒரு மகனாக – நெஞ்சு நிறைந்த சோகச் சுமையை அவர்களின் திருப்பாதந் தொட்டுக் காணிக்கையாக்கிய அஞ்சலி.... ஒரு புனிதரின் விண்ணகப் பயணத்தின்போது சுற்றம் சூழப் பிரியாவிடை அளித்தது, இந்த வாழ்க்கையில் கிடைத்த மாபெருங் கொடை.



**கலாபன் வாஸ்**
94863 90793

# மதுரை மன்னர்கள் அளித்த மானியம்

தூத்துக்குடி பரிசுத்த பனிமய அன்னையின் அற்புத மகிமையால், டச்சு ஆட்சியாளர்கள் மட்டுமல்லாது முத்துக்குளித்துறை பரவர்களிடம் அநியாய வரி வசூலித்த மதுரை நாயக்க மன்னர்களும் அவர்களுடைய பிரதானிகளும் ஈர்க்கப்பட்டனர்.

மதுரை நாயக்க மன்னர்கள் தங்களுக்கு புண்ணியமாக, பனிமய அன்னை ஆலயத்தில் **நித்திய கால பூஜைகள்** நடக்கும்படி காணிக்கை செலுத்தி வந்துள்ளனர்.

மதுரையை அரசாண்ட **வங்கார குமார திருமலை நாயக்கன்** அன்றைய பரதகுல சாதித் தலைவர் **தொன் மிக்கேல் பேதுரு கோமஸ்** என்பவருக்கு (1736-1750) எழுதி அனுப்பிய ஓலைச் சுவடியில் மேற்கூறிய விபரம் காணப்படுகின்றது.



பரதகுல சாதித் தலைவர்களின் இல்லமான பாண்டியபதியில் பாதுகாக்கப்பட்டுவரும் ஆவணங்களில், இந்த ஓலைச்சுவடி உள்ளது.

விஜயநகர சாம்ராஜ்ய காலத்தில் பழந்தமிழில் 1741-ஆம் ஆண்டில் எழுதப் பட்ட அந்த ஓலை, 1927-ஆம் ஆண்டில்தான் கொழும்பில் முயற்சி செய்து ஆய்வு மேற்கொண்டு, கீழ்கண்டவாறு பகர்ந்தளிக்கப் பட்டது.

1. ஓலைச்சுவடி 1741-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாளில் ஆணையிடப்பட்டது.
2. ஓலையில் எழுதப்பட்ட பட்டயத்தை ஆணையிட்டவர், மதுரை மன்னர் வங்கார திருமலை நாயக்கன்.
3. நாயக்கனுக்கும் அவருடைய பிரதானிகளுக்கும் புண்ணியமாகவும் தூத்துக்குடி கீழவூர் பரவ குல கிறிஸ்தவர்கள் குருசடி கோயில் நித்திய கால பூஜை நடக்கும்படி கட்டளையிடப் பட்டது.
4. ஆலயத்தின் அடித்தொண்டு தினக்கட்டளையாக நாள் ஒன்றுக்கு பணம் 2-ஆக கட்டளை செய்யப்பட்டது.
5. சிறிது நாள் மானிய பேதங்களினாலே பூஜைகள் நடந்து வராததுமாக இருந்து வந்ததினாலே, இந்தக் கட்டளையிடப்படுகின்றது.



6. கீழலூர் கோயிலுக்குத் தென்புறத்தில் உப்பு பாத்தி நூறு என்பதை பயிற்கொண்டு கையாண்டு கொள்ளவேண்டும்.
7. இந்தப்படி தன் மஸாதனப் பட்டயம் எழுதிக் கொடுக்கப்பட்டது.

தூத்துக்குடியைக் கைப்பற்ற பற்பல அந்நியர்கள் படையெடுத்து வந்த வேளையிலும், மேற்கூறிய 100 உப்பு பாத்திகளும், பரவ குல சாதித்தலைவரால் நியமிக்கப்படும் ஒரு நபரால் நிர்வாகிக்கப்பட்டு, அதன் லாபம் கோயிலுக்கு செலுத்தப்பட்டு வந்துள்ளது.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேய அரசின் சுங்கத்துறையினர் இந்த நூறு உப்புப் பாத்திகளையும் எடுத்துக் கொண்டு, அதற்கு பதிலாக மானியம் என்ற பேரில் ஒவ்வொரு மாதமும் 8 ரூபாய் - 6 அணா - 5 பைசா என்ற கணக்கில் (அரைப்பவுன் மதிப்பு) செலுத்தி வந்துள்ளனர்.

25-6-1888-ல் சுங்கத்துறையினர் எழுதிய கடிதம், பாண்டியபதி கோப்புகளில் உள்ளது.

பரவ குல சாதித் தலைவர் **தொன் கபிரியேல் தெக்குரூஸ் லாசர் மோத்தா வாஸ்** (1889-1914) மானியத்தைப் பெற்று, ஆலயத்தின் பங்குக் குருவான **மிஸ்குய்த்தே சுவாமி**களிடம் (Rev.Fr. J.N.X.Misquite) செலுத்தியதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆங்கிலேய அரசின் சுங்கத்துறையினர் மானியம் தருவதை நிறுத்துவதற்காக ஒரு சர்ச்சையை ஏற்படுத்தினர். பின்னர், 1888-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து, பனிமய அன்னை ஆலயத்திற்கு 1741-ஆம் ஆண்டு முதல் சுமார் 150 ஆண்டுகளாக முறையாக கொடுக்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்டது.

**தி. சொர்ணராஜன் விக்டோரியா**





# பனிமய சாட்சியம்

**பனிமய சாட்சியம் : 63**

## அனிஸ், மார்த்தாண்டம்

கடந்த மாதம் மூன்றாம் சனி வழிபாட்டின் இறுதியில் ஒரு தம்பதியினர் பீடத்தில் நின்றுகொண்டிருந்த பங்குத் தந்தையை அணுகி, 2 கிராம் எடையுள்ள ஒரு தங்க மோதிரத்தைப் பனிமயத் தாய்க்குக் காணிக்கையாக வழங்கினர்.

மார்த்தாண்டம் அருகேயுள்ள திக்குறிச்சியைச் சார்ந்த திரு. சுந்தர்ராஜ், திருமதி. ரோஸ்லின் தம்பதியரே அவர்கள். உடன் அவர்களின் மகள் அபிஷாவும் வந்திருந்தார். ஆனால், மகன் அனிஸ் உடன் வரவில்லை. அந்த மகன் அனிசுக்காகத்தான் இந்தக் காணிக்கையை அவர்கள் கொண்டுவந்திருந்தனர்.

மகன் அனிசுக்கு 24 வயதாகிறது. வெகு காலமாக நல்ல வேலை கிடைக்க வேண்டுமென்று இந்தக் குடும்பத்தினர் இறைவனிடம் மன்றாடி வந்தனர். தூத்துக்குடி வந்து பனிமயத் தாயிடமும் விண்ணப்பித்துள்ளனர். பனிமய அன்னையின் பரிந்துரையால் அனிசுக்கு நல்ல வேலை கிடைத்துவிட்டது. எனவே, தாய்க்கு நன்றி செலுத்தி, இந்தக் காணிக்கையை வழங்கியுள்ளார்கள்.

கேட்ட வரத்தைப் பெற்றுத் தரும் பனிமய அன்னையே வாழ்க!

# விவிலியப் போட்டி 93

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**சீராக்கின் ஞானம் அதிகாரம் 1 முதல் 5 வரை**

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. தாயைவிட அவர் உன்மீது __________ கூர்வார்.
2. பொறுமையுள்ளோர் தக்க காலம் வரை __________ காப்பர்.
3. ஆண்டவர் __________ உள்ளவர்.
4. __________ அவர்களுள் ஊற்றெடுத்துப் பாயும்.
5. முறைகேடான செல்வங்களில் __________ வைக்காதே.
6. ஆண்டவரின் __________ எல்லையற்றது.
7. வறுமையில் உழல்வோர்க்கு காலம் தாழ்த்தாமல் __________ செய்.
8. பாவிகளுக்கு __________ அருவருப்பைத் தரும்.

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.10.2022**

## விவிலியப் போட்டி 92

**செப்டம்பர் 2022 விடைக்குறிப்புகள்**

**லூக்கா : அதிகாரம் 1 - 3**

| | | |
|---|---|---|
| 1. | ஆசி | லூக் 1:42 |
| 2. | பேறுபெற்றவர் | லூக் 1:45 |
| 3. | அருள்மிகப் பெற்றவரே | லூக் 1:28 |
| 4. | அருளைக் | லூக் 1:30 |
| 5. | குழந்தையும் ஆசி | லூக் 1:42 |
| 6. | தூய ஆவி | லூக் 1:35 |
| 7. | கடவுளின் வல்லமை | லூக் 1:35 |
| 8. | மரியா | லூக் 1:27 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875**

அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 165**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 98**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | | |
|---|---|---|
| 1. | சிறுமலர் அன்பியம் | **விஜி சகாயராஜ்** |
| 2. | சூசையப்பர் அன்பியம் | **கிறிஸ் ரிஜோ** |
| 3. | திருச்சிலுவை அன்பியம் | **கில்டன் சரோலின்** |
| 4. | வியாகுல மாதா அன்பியம் | **ராஜா ஜரின்** |

**பாராட்டுக்குரியவர்கள் : 94**

1. அருள்சகோ. ரோசம்மாள்
2. அருள்சகோ. லீமா

**அந்தோனியார் அன்பியம்**
3. சரோஜா
4. பிருந்தா சார்லஸ்
5. ஜெயா
6. லூக்காஸ் சகாயம்
7. ரீனா மொறாயிஸ்

**அன்னை தெரசா**
8. சுகன் மோனிஷா
9. சுரேஷ் பிரேமா
10. ஜூலியட் ஜெயரூபி

**அன்னை வேளாங்கன்னி**
11. டென்சி
12. ரிஷாலின்

**கிறிஸ்தரசர்**
13. ஸெலஸ்கி கிளமென்ட்
14. ரெக்ஸ் கிரீன்வெல்
15. ஜூலியட் சாவியோ
16. லூரட் வசந்த்
17. எஃரின் ஜூலியா

**தஸ்நேவிஸ் மாதா**
18. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
19. சகாயராணி தனராஜ்
20. பிரின்சி

**பாத்திமா மாதா**
21. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
22. பினோ ஜீவிதா
23. ஜெசிந்தா கான்ஸ்டன்
24. மார்த்தா

**இரக்கத்தின் மாதா**
25. சித்ரா மோத்தா
26. இருதயம்மாள் கொன்சால்
27. பிரைட்டன் ஜெரோஃபின்

**ஜெபமாலை மாதா**
28. கல்யாணி செல்வராஜ்
29. சகாயம்மாள் பெனடிக்ட்
30. இருதயம்மாள் கபிரியேல்
31. எலிசா பிரசாத்

**ஜூடு அன்பியம்**
32. டெரன்சியா அரிஸ்டோ
33. அந்தோனிசாமி
34. டிரைபேனா

**காவல்தூதர்**
35. வெனிட்டாள்
36. ஜெயா அகஸ்டின்
37. சாந்தி ஆல்ட்ரின்
38. ட்ரினிஷா
39. செகரியா இம்மானுவேல்
40. பிரிசிலா

**குழந்தை தெரசா**
41. கிறிஸ்டி லிஸ்டன்
42. ஷோபனா கோமஸ்
43. பெனி மொறாயிஸ்

**குழந்தை இயேசு**
44. மோனிகா செபாஸ்டின்
45. எமல்டா
46. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**
47. ஃபிலோ கோமஸ்
48. ஜெனோ சேவியர்
49. ரம்யா
50. ரோஸ்லின் தாமஸ்
51. சான்டினா
52. ஆலிவர் வி.ராயன்

**மணல் மாதா**
53. கெயிட்டன் ஃபர்னான்டோ
54. ரொசாரி கோமஸ்
55. ஹெபிட்டா

**மிக்கேல் அதிதூதர்**
56. எல்சிட்டா
57. வினோ அந்தோனி
58. இன்ஃபன்ட் ஜோஷ்னா

**பனிமய அன்பியம்**
59. மொர்சி கோமஸ்
60. ஜூடு ரதி

**பவுலடியார்**
61. லீமாரோஸ் ஜாய்
62. ராஜா ரோஸ்லின்
63. ரஸ்கின் வசந்தா
64. ஜான்சன் ஒஃபிலியா

**பரிபூரணமாதா**
65. ஜெனிஷா
66. மெடோனா

**பொம்பெயி மாதா**
67. டிஃபானி அண்டோ
68. இம்மாக்குலேட்
69. லூடா கான்ஸ்டன்
70. மாத்யூ கர்டோசா
71. தெரசா பிரகாஷ்
72. டயானா கோமஸ்

**இராயப்பர்**
73. ஷைனி
74. நேவிசம்மாள்

**சவேரியார்**
75. டெலிலா அமலன்
76. ஆரோக்கியராஜ் ஹெலினா
77. ஜோர்னல் ஜென்சி
78. அனுஷ்யா பீட்டர்
79. சவேரியா பிச்சை
80. மெர்லின்
81. ரூபா மனுவேல்
82. பிரின்சி ஆக்னல்

**செபஸ்தியார்**
83. பிரவீனா
84. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
85. நேசம்
86. ஜூடி ஆரோக்கியராஜ்
87. டிஜேபிஆர் இராயன்
88. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**
89. செலஸ்டின்
90. எல்சிற்றா ஆனந்தன்

**சூசையப்பர்**
91. ரூபி கொர்னேலியுஸ்
92. மென்சி

**திருச்சிலுவை**
93. கைத்தான் ரமணி

**வியாகுல மாதா**
94. கெலிண்டன்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 67

### பரிசு பெறுபவர்கள் : 4

1. பாளையங்கோட்டை — ரோசி
2. தூத்துக்குடி திரு இதயங்களின் பேராலயம் — டீனு ராய்
3. கோயம்புத்தூர் — ஆஷா தனசீலன்
4. சென்னை — வின்சென்ட் ஹிலோபஸ்

### பாராட்டுக்குரியவர்கள் : 63

**ஆலந்தலை**
95. ஃபொன்சேகா
96. மரியம்மாள்
97. மரிய கொரற்றி
98. சுதா ஜெயிற்றன்
99. மேரி லோபோ

**வீரபாண்டியன்பட்டணம்**
100.ஆன்ட்ரின் சில்வேரா
101. ஷாந்தினி

**ஆறுமுகனேரி**
102.தொம்மை அந்தோனி

**சேதுக்குவாய்த்தான்**
103.ஞானம் பாலசிங்

**புதியம்புத்தூர்**
104.ஹெலன் அன்னமணி

**சென்னை**
105.கமலஜோதி ஜெயசீலன்
106.சகாயராணி

**பாளையங்கோட்டை**
107.பிரேமா குணசீலன்
108.டெனிசா ஃபர்னான்டோ
109.சுவர்ணா

**கயத்தாறு**
110. அமல்ராஜ்

**உரியூர்குப்பம்**
111. சகோ. லெட்டீசியா

**பெரியகுளம்**
112. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
113. ரொசாலி
114. மரிய மதலேன்
115. ஜெர்மேன்

**கோயம்புத்தூர்**
116. சகோ. லூக்காஸ்

**சேலம்**
117. சூசைராஜ்

**திருமானூர், கும்பகோணம்**
118. பீட்டர்

**அரக்கோணம்**
119. குமாரி சந்திரசேகர்

**திருச்சி**
120.மோனிட்டா கிறிஸ்டி
121. மேத்யூ விவேக்
122.டோனி
123.ஜான்சிராணி

**மதுரை**
124.சகோ. அப்போலின்

**வடக்குத்து**
125.ஹென்றிதாஸ்

<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>

**திரு இதயங்களின் பேராலயம்**
126.பெனிட்டா
127.சுசீலன்
128.ரமோலா கமிலஸ்
129.ரிமோல்டா
130.ஜூலியட் வாஸ்
131. பாப்டிஸ்டா
132.எல்சி

**குருஸ்புரம்**
133.ஆசீர்வாதம்
134.பிளசி செல்வராஜன்
135.தமிழ்ச் செல்வன்
136.பௌவுசி ஜோ மைக்கேல்
137.ஜான்சி மென்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
138.சுகிர்தா

**யூதா ததேயு கோவில்**
139.ரோஸ் சேவியர்
140.சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
141. சாந்தினி
142.ரியாலினோ
143.பேபி வால்டர்
144.அன்சிட்டா
145.பிண்டன் சோபியா

**லூர்தம்மாள்புரம்**
146.ரெனிஸ்டன் ஜெர்லின்

**சார்லஸ் கோவில்**
147.சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
148.வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
149.செக்கரியா சாமுவேல்
150.லிஜியா ஃபர்னான்டோ
151. ஜெசிந்தா ஃபர்னான்டோ

**இஞ்ஞாசியார்புரம்**
152.அற்புத செல்வி
153.சூசை நவீன்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
154.விர்ஜின்
155.தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
156.மென்சிலா லொயோலா
157.சுஜாதா மகேஷ்



**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 138**

**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 165**

# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

தூத்துக்குடி

தங்கத் தேர் 2023 ஆசிர்வாதங்களுக்காக

# முழு இரவு தொடர் செபமாலை - 2022

**08-10-2022 சனிக்கிழமை**

| | | |
|---|---|---|
| 10.00 – 10.10 | நற்கருணை எழுந்தேற்றம்,<br>தொடக்க உரை - அருள்பணி. குமார்ராஜா | |
| 10.;10 – 10.30 | மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்<br>அருள்சகோதரிகள் | 1 |
| 10.30 – 11.00 | ஒளியின் மறை உண்மைகள்<br>லயன்ஸ் டவுண் சகாய மாதா பங்கு | 2 |
| 11.00 – 11.30 | துயர் நிறை மறை உண்மைகள்<br>திரு இதயங்களின் பேராலயப் பங்கு | 3 |
| 11.30 – 12.00 | மகிமை நிறை மறை உண்மைகள்<br>குருஸ்புரம் புனித சூசையப்பர் பங்கு | 4 |
| 12.00 – 12.30 | மறையுரை - அருள்பணி. அமலன் தமியான் | |
| 12.30 – 01.00 | செபமாலைப் பவனி (அமலோற்பவ மாதா வாலிபர் சபை)<br>மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள் | 5 |
| 01.00 – 01.30 | ஒளியின் மறை உண்மைகள்<br>புனித தோமையார் கோவில் பங்கு | 6 |
| 01.30 – 02.00 | துயர் நிறை மறை உண்மைகள்<br>அண்ணாநகர் மிக்கேல் அதிதூதர் பங்கு | 7 |
| 02.00 – 02.30 | மகிமை நிறை மறை உண்மைகள்<br>புனித சார்லஸ் கோவில் பங்கு | 8 |
| 02.30 – 02.45 | மரியன்னைப் பாடல்கள் | |
| 02.45 – 03.10 | மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்<br>நகர மரியாயின் சேனையினர் | 9 |
| 03.10 – 03.35 | ஒளியின் மறை உண்மைகள்<br>பொம்பயி செபமாலை மாதா சபையினர் | 10 |
| 03.35 – 04.00 | துயர் நிறை மறை உண்மைகள்<br>அனைத்து இறைமக்கள் | 11 |
| 04.00 – 04.20 | மகிமை நிறை மறை உண்மைகள்<br>தூய பனிமய அன்னை பேராலயப் பங்கு மக்கள் | 12 |
| 04.20 – 04.40 | பிரார்த்தனை, பாவிகளுக்கு அடைக்கலமே,<br>குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் ஜெபம் - அமலோற்பவ மாதா சபையினர் | |
| 04.40 – 05.00 | திருப்பலிக்கான தயாரிப்பு - ஒப்புரவு அருள்சாதனம் | |
| 05.00 – 05.45 | திருப்பலி - அருள்பணி. அமலன் தமியான் | |

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 39)

## அக்டோபர் - 2022

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|---|
| காலை | 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை | 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *தினமும் காலை 06.00 - 06.30*

*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00*
- ✓ *விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

*உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.30 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.*

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

391. அன்னை மரியாவின் **பிறப்புவிழாவை** முன்னிட்டு 08.09.2022 அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும், கேக் வெட்டப்பட்டு, வந்திருந்த அனைவருக்கும் பரிமாறப்பட்டது,

392. திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் **திருச்சிலுவை மகிமைப் பெருவிழா** கடந்த 12.09.2022 திங்கள் திருப்பலி, கொடியேற்றத்துடன் தொடங்கியது. 13.09.2022 செவ்வாய் மாலை 06.30 மணிக்குத் தூத்துக்குடி மறைவட்ட முதன்மைக் குரு பேரருள்திரு, பென்சன் தலைமையில் மாலை ஆராதனை நடைபெற்றது. மறுநாள் 14.09.2022 புதன் மாலை 05.30 மணிக்கு அருள்பணி. அமலன் தமியான் அவர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலியும், தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்றன. அன்று காலை 05.30 மணிக்குப் பேராலய வளாத்திலுள்ள திருச்சிலுவைக் குருசடியிலும் திருவிழாத் திருப்பலி நடைபெற்றது.

393. தங்கத் தேர் 2023க்காக உருவாக்கப்பட்ட **12 பணிக்குழுக்களுக்கான கலந்தாய்வுக் கூட்டங்கள்** கடந்த 09.09.2022 முதல் 24.09.2022 வரை பங்குத் தந்தையின் தலைமையில் நடைபெற்றன. தங்கத் தேர்ப் பணிகளுக்கான பல செயற் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

394. 17.09.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (23)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. “உயர்கல்வி பயிலும் மாணவரின் ஆசீர்வாதங்களுக்காக” என்ற கருத்தில் நடைபெற்ற இவ்வழிபாட்டில் பெயர்ப் பதிவு செய்த 21 மாணாக்கருக்குப் பனிமயத் தாயின் பாதத்தில் வைக்கப்பட்டிருந்த பேனாக்கள் ஆசிர்வதிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

395. பனிமயப் பாசறை (86) கடந்த 20.09.2022 செவ்வாய் மாலை **“பழைய ஏற்பாடு: ஓர் அறிமுகம்”** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. 44 பேர் கலந்துகொண்டனர்.

396. பனிமய அன்னையின் பெருவிழாவின்போது காணிக்கையாக வந்த 1918 நோட்டுகள் 7 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

397. தங்கத் தேர் 2023 வலம் வருவதற்கு இன்னும் எத்தனை நாள்கள் என்பதைக் காட்டும் “டிஜிடல் கவுண்ட் டவுண்” 25.09.2022 ஞாயிறு அன்று பேராலய மண்டபத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

398. தங்கத் தேர் 2023ன் ஆசிர்வாதங்களுக்காக **300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு**, நமது பங்கின் சூசையப்பர் அன்பியம், கிறிஸ்தரசர் அன்பியம், குழந்தை இயேசு அன்பியம் ஆகிய மூன்று அன்பியங்களிலும் தொடங்கி வைக்கப்பட்டது. 25.09.2022 அன்று மாலை நற்கருணை ஆசீர் முடிந்ததும் 3 புதிய பனிமய அன்னையின் திருச்சுருபங்கள் அர்ச்சிக்கப்பட்டு, பேன்ட் வாத்தியம் முழங்க பவனியாக இந்த இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

399. பனிமயப் பாசறை (87) கடந்த 26.09.2022 திங்கள் மாலை **“விவிலியமும், உளவியலும்”** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. 29 பேர் கலந்துகொண்டனர்.

400. திருச்சி பவுல் குருமடத்திலிருந்து வந்திருந்த **27 திருத்தொண்டர்கள்** 27.09.2022 செவ்வாய் மாலைத் திருப்பலி முடிந்ததும், 28 அன்பியங்களிலுள்ள அனைத்து இல்லங்களையும் மந்திரித்தனர்.

## பங்கில் நிகழ்ந்தவை



*வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 111. | ஹட்ரினா | அக்வினாஸ் - ஜாப்ரி | 11.09.2022 | செபஸ்தியார் |
| 112. | அட்ரீயானோ ஜேனோர்சன் | எட்மண்ட் - நிஷா | 11.09.2022 | குழந்தை இயேசு |



*வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 124 | ரேஷ்லின் | பிரசாத் - மெர்லின் | 17.09.2022 | சவேரியார் |



*ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 100. | பிரபாகரன் - லியோனி | பாத்திமா | 01.09.2022 |
| 101. | ஷெர்லின் - ஸ்பெலிங்டா | குழந்தை இயேசு | 05.09.2022 |
| 102. | மரிய பிர்லா   டினுலின் | செபஸ்தியார் | 08.09.2022 |
| 103. | நெல்ஸ்டன் - மரிய டன்ஸ்டிலா | இரக்கத்தின் மாதா | 14.09.2022 |



*செபிக்கின்றோம்*

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 132. | ரீட்டா உபால்டுராஜ் | லுவனா சுரேஷ் | 02.09.2022 | சிந்தாத்திரை |

### 5. அன்புடன் வரவேற்கிறோம்

**நமது பங்கில் புதிதாக இணைந்துள்ள பின்வரும் குடும்பங்களை வரவேற்கிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 12. | டோன் போஸ்கோ | அன்னை வேளாங்கன்னி | 89 |
| 13. | சேசையாபர்னாந்து | அன்னை வேளாங்கன்னி | 90 |
| 14. | கில்டா | திவ்யபாலன் | 79 |
| 15. | குருஸ்மெல் | இரக்கத்தின் மாதா | 77 |
| 16. | ஜோசப் மாரியப்பன் | ஜூடு | 83 |
| 17. | ஜெகன் | குழந்தை இயேசு | 88 |
| 18. | கெனிட்டன் ராஜ் | குழந்தை இயேசு | 89 |

| | | | |
|---|---|---|---|
| 19. | ஆரோக்கிய ஜெர்மான்ஸ் | லூர்து மாதா | 63 |
| 20. | சுவக்கின் கனகராஜ் | லூர்து மாதா | 64 |
| 21. | போஸ் குருஸ் | மணல்மாதா | 51 |
| 22. | சகாயமிசியர் | மணல்மாதா | 52 |
| 23. | கிறிஸ்டின் | மிக்கேல் அதிதூதர் | 70 |
| 24. | சகாயராஜா | பனிமயம் | 66 |
| 25. | மங்கள ராஜ் | பவுலடியார் | 60 |
| 26. | ஜெய பிரகாஷ் | பொம்பெய் மாதா | 56 |
| 27. | மைக்கேல் அண்டோ | பொம்பெய் மாதா | 57 |
| 28. | வெனான்சியூஸ் | இராயப்பர் | 57 |
| 29. | ஜோசப் | இராயப்பர் | 58 |
| 30. | சேசுராஜ் | செபஸ்தியார் | 68 |
| 31. | பிரசாத் | செபஸ்தியார் | 69 |
| 32. | பார்த்திபன் | சிந்தாயாத்திரை | 91 |
| 33. | பிரான்சிஸ் ராஜேஷ் | சிறுமலர் | 62 |
| 34. | அண்டன் கர்டோசா | திருச்சிலுவை | 77 |

## 6. அன்புடன் வழியனுப்புகிறோம்

**நமது பங்கைவிட்டு வெளியேறிய பின்வரும் குடும்பங்களை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 13. | நிக்கோலாஸ் | அன்னை வேளாங்கன்னி | 7 |
| 14. | கனிஷ்டா | கிறிஸ்தரசர் | 7 |
| 15. | ரஞ்சினி | தஸ்நேவிஸ் மாதா | 12 |
| 16. | ஹாட்லி | தஸ்நேவிறஸ ;மாதா | 57 |
| 17. | ஹென்றி | தஸ்நேவிஸ் மாதா | 7A |
| 18. | அரசுமிசியர் | திவ்யபாலன் | 54 |
| 19. | நெப்போலியன் | திவ்யபாலன் | 57 |
| 20. | சிந்தாத்திரை | ஜெபமாலை மாதா | 24 |
| 21. | தாமஸ் | ஜெபமாலை மாதா | 76 |
| 22. | தாமஸ் | ஜூடு | 11 |
| 23. | சில்வெஸ்டர் | ஜூடு | 67 |
| 24. | பெல்சி | காவல்தூதர் | 05 |
| 25. | பியோ | காவல்தூதர் | 66 |
| 26. | ராஜா | குழந்தை இயேசு | 61 |
| 27. | சகாயம் | லூர்துமாதா | 62 |
| 28. | வரபிரசாதம் | பனிமயம் | 62 |
| 29. | நசரேன் | பரிபூரணமாதா | 59 |
| 30. | ஜோசப் கிங்ஸ்டன் | சவேரியார் | 54 |
| 31. | ஜெரோம் | சவேரியார் | 68 |
| 32. | இன்பென்டா | சவேரியார் | 71 |

| | | | |
|---|---|---|---|
| 33. | எமல்டாஸ் | செபஸ்தியார் | 27 |
| 34. | ஆரோக்கிய பிரதீப் | சிந்தாத்திரை மாதா | 52 |
| 35. | தாமஸ் | சூசையப்பர் | 60 |
| 36. | பிராங்கிலின் | வியாகுல மாதா | 45 |
| 37. | மோட்சராணி | வியாகுல மாதா | 50 |
| 38. | வினோத் | வியாகுல மாதா | 58 |
| 39. | அக்னஸ் | வியாகுல மாதா | 60 |

## நடைபெற இருப்பவை

★ 01.10.2022 முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், **சப்பரப் பவனியும்**, தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். அவை நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா தொலைக்காட்சியிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ 07.10.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 08.10.2022 இரண்டாம் சனியன்று **தங்கத் தேர் 2023ன்** ஆசிர்வாதங்களுக்காக பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையின் முன்னெடுப்பில் இரவு 10.00 முதல் அதிகாலை 05.00 வரை **முழு இரவு தொடர் செபமாலை** நடைபெறும்.

★ தங்கத் தேர் 2023 ஆயத்தப் பணியாக 09.10.2022 ஞாயிறு காலை 10.30 மணிக்குத் தேர்ப்பிறையிலிருந்து **தேர் இழுத்துவரப்பட்டு**, புதிதாக அமைக்கப்பட்டுள்ள **தேர் ஆயத்தக் கூடத்தில்** நிறுத்தப்படும்.


★ 15.10.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (24)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை **"அருள்பணியாளர்களின் ஆசீர்வாதங்களுக்காக"** நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் - கிழமை | | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 96. | 04.10.2022 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இறைபுகழ்ச்சியின் வலிமை |
| 97. | 11.10.2022 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | பரிந்துரை மன்றாட்டு |
| 98. | 18.10.2022 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | என்ன நேர்ந்தாலும் நன்றி |
| 99. | 25.10.2022 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்டு ரவி | எல்லா வேளையிலும் இறைவேண்டல் |
| 100. | 01.11.2022 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இறைவார்த்தையும் புனிதர்களும் |


மாதம் ஒரு மாதா படம் : 33
ஆறுதல் தரும் அன்னை!
ஓவியர் ஜெயராஜ்



# தூய பனிமய அன்னைப் பேராலயம்

தூத்துக்குடி



## தங்கத் தேர் 2023 ஆசிகளுக்காக 300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டுகள்

1. அன்புத் தந்தையே இறைவா, வருகிற ஆண்டு பனிமய அன்னையின் பெருவிழாவை உமது திருவுளத்தின்படி நாங்கள் கொண்டாடவும், தங்கத் தேரில் வலம் வரவிருக்கும் பனிமயத் தாயின் பரிந்துரையால் உம்மிடமிருந்து நிறைவான ஆசிகளைப் பெற்றுக்கொள்ளவும் அருள்தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

2. அடைக்கலப் பாறையான இறைவா, பனிமயத் தாயின் தங்கத் தேர்த் திருப்பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள், கலைஞர்கள், பொறுப்பாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரையும் ஆபத்துகள், விபத்துகள், நோய்கள், இயற்கைச் சீற்றங்கள், தீமைகள் அனைத்திலிருந்தும் பாதுகாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

3. நலன்களின் தந்தையே இறைவா, தங்கத் தேர்த் திருப்பணிகளுக்காகத் தாராளமாகக் காணிக்கை தரும் உபகாரிகள், நன்கொடையாளர்கள், தங்கள் உடல் உழைப்பு, ஆற்றல், நேரம் அனைத்தையும் வழங்கும் தொண்டர்கள், உதவி செய்யும் அதிகாரிகள், ஊழியர்கள், தலைவர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

4. வல்லமையின் ஊற்றான இறைவா, தங்கத் தேர்த் திருப்பணிகளும், பனிமய அன்னையின் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறுவதற்குத் தடையாய் வரும் இயற்கைத் தடைகள், மனிதரின் தடைகள், அலகையின் தடைகள் அனைத்தையும் தூய ஆவியாரின் வல்லமையால் உடைத்துத் தகர்க்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

5. பாதுகாத்துப் பராமரிக்கும் இறைவா, தங்கத் தேர்த் திருப்பணிகள் நடைபெறும் பேராலய வளாகத்தை உமது தூதர்கள் சூழ்ந்து நின்று காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

6. அருள் வழங்கும் வள்ளலான ஆண்டவரே, தங்கத் தேர்ப் பெருவிழாவைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் கூட்டுத் திருமண விழாவையும், மணமக்களையும், உதவி செய்யும் நல்லுள்ளங்களையும் நிறைவாக ஆசிர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

7. இரக்கத்தின் ஊற்றான இறைவா, தங்கத் தேர்ப் பெருவிழாவுக்காக ஆயத்தம் செய்யும் எங்கள் அனைவரையும் நிறைவாக ஆசிர்வதித்து, ஆயத்த நாள்களும், பெருவிழா நாள்களும் எங்களுக்கு எல்லையற்ற ஆசிகளின் நாள்களாக அமைய அருள்தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

8. ஆசிகளின் ஊற்றே இறைவா, பனிமய அன்னையைத் தரிசிக்க இந்தத் திருத்தலமாம் பேராலயம் நாடி வரும் திருப்பயணிகள் அனைவரையும் நீர் ஆசிர்வதித்து, அவர்களின் வாழ்வில் அற்புதங்களையும், வியத்தகு செயல்களையும், மனமாற்றத்தையும் நிகழ்த்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

9. நம்பிக்கையின் ஊற்றான கடவுளே, தங்கத் தேரில் பவனி வரும் பனிமயத் தாயின் பரிந்துரையால் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் எங்கள் தூத்துக்குடி மறைமாவட்டத்தை ஆசிர்வதித்து, வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

10. மகிழ்ச்சியின் நாயகனே இறைவா, பனிமய அன்னையைத் தங்கள் இல்லங்களில் வரவேற்று, தொடர் பரிந்துரை மன்றாட்டில் கலந்துகொள்ளும் அனைத்துக் குடும்பங்களையும் விண்ணக, மண்ணகக் கொடைகளால் நிரப்ப வேண்டுமென்றும், அவர்களுக்கு அருள்செல்வத்தையும், பொருள் செல்வத்தையும் வாரி வழங்க வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

# முதல் ஆண்டு நினைவு அஞ்சலி

10.10.2022

**"இதோ உலகத்தின் முடிவு வரை நான் உங்களுடனே இருக்கிறேன்"**

**(மத் : 2B-2D)**



**மண்ணில்**
**20.06.1943**

**விண்ணில்**
**10.10.2021**

# ட. திரேசம்மாள் கொரையறா

**வயது : 78**

## திருப்பலி

**10.10.2022 - திங்கட்கிழமை**
**காலை 11.00 மணி - அருட்தந்தை ஜோசப் இரத்தினராஜ் தலைமையில் புனித அந்தோனியார் திருத்தலம் தூத்துக்குடி.**

## பிரிவால் வருந்தும்

கணவர் : ஜோசப் செல்வராஜ்


**சகோதர, சகோதரிகள், மக்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
**கொள்ளு பேத்தி மற்றும் குடும்பத்தினர்**

105, புனித அந்தோணியார் கோவில் தெரு, தூத்துக்குடி.

# விண்ணக வாழ்வின் நினைவஞ்சலி

11ம் ஆண்டு நினைவு | 50ம் ஆண்டு நினைவு





## தஸ்நேவிஸ் மேரி மோத்தா

| மலர்ந்தது | உதிர்ந்தது |
|---|---|
| 06.08.1926 | 26.05.2011 |

வயது : 85

## T. கிரேசர் மோத்தா

| மலர்ந்தது | உதிர்ந்தது |
|---|---|
| 20.02.1915 | 05.10.1972 |

வயது : 57

விண்ணக ஒளியால் ஐம்பது ஆண்டுகளாக ஒளிர்விக்கப்பட்டு,
பொன்னென மின்னும் எம் தந்தை **கிரேசர் மோத்தா** அவர்களுக்காக
நன்றி சொல்லும் இந்நாளில்,
பனிபோல் தூய்மையாய் இறைசந்நிதானத்தை அழகு செய்யும்
எம் தாய் **தஸ்நேவிஸ் மேரி மோத்தா** அவர்களையும்
உன்னத திருப்பலியில் பாசமுடன் நினைவுகூர்கிறோம்.
எம் குலவிளக்குகளான இவர்கள்
விண்ணக வீட்டில் அகல்விளக்குகளாகத் திகழ்வார்களாக!

*இவர்களால் பெருமைக்கொள்ளும்*

**Fr. திவாகர்** (OFM Cap), **மக்கள், மருமக்கள்,**
**பேரக்குழந்தைகள், பூட்டன், பூட்டிகள்**

23. குருசடி தெரு, பெரியகோவில் காம்பவுண்ட்,
தூத்துக்குடி – 1,

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"(யோவான் 11:25)



பிறப்பு
03.10.1970

இறப்பு
13.01.2021

# F. மரியதாஸ் பர்னாண்டோ

நாங்கள் உங்களை இழந்த நாள்,
எங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்தோம்.
நீங்கள் இல்லாத நாட்கள் வேதனை நிறைந்த
வெறுமையோடு குழப்பத்தில் தவிக்கிறோம்.
ஜனனமும் மரணமும் இயற்கையின் நியதி.
ஆனால் எம் மனம்தான்
உங்கள் எதிர்பாரா மரணத்தை ஏற்க மறுக்கிறது.
ஒரு அப்பாவுக்கும் அவரது பிள்ளைகளுக்கும்
இடையிலான அன்பில் காலாவதி இல்லை.
உங்கள் மரணம் உங்களது வாழ்க்கையை பூர்த்தி செய்கிறது.
நமது உறவை அல்ல.
உங்கள் நினைவுகள் எமது இதயத் துடிப்புகளாக மாறிவிட்டன.
இருப்பினும், எத்தனை வருடங்கள் சென்றாலும்
உங்கள் மரணத்தின் வலி ஒருபோதும் குறையாது.
எங்களை வெற்றிகரமாகப் பார்க்க
வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்த நபர் நீங்கள்,
நீங்கள் இல்லாவிட்டாலும்
எப்போதும் எங்கள் இதயத்தில் இருப்பீர்கள்.
ஏனென்றால் அங்கே நீங்கள் என்றும் உயிரோடு இருப்பீர்கள்.

உங்கள் பிரிவால் வருந்தும்
**மனைவி, மக்கள்**

SHINY Ph : 98421 31493